**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 106** **நாள்: 19.04.2026**

**சென்னை மாவட்டத்தில் நேர்மையான மற்றும் 100 சதவீத வாக்குப்பதிவு குறித்து வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்ற மாபெரும் வாக்காளர் விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டத்தினை தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக், இ.ஆ.ப., அவர்கள், கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் நேர்மையான மற்றும் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டு மற்றும் நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகள், அனைத்து பேருந்து நிறுத்தங்களிலும் தேர்தல் குறித்த விளம்பரங்கள், வினாடி வினா, பேருந்துகளின் வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்துதல், திரையரங்குகள், வானொலி மற்றும் சமூக ஊடகங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தேர்தல் விழிப்புணர்வுப் பாடல்கள் உள்ளிட்ட பல்வகை விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் இந்திய வாக்காளர் சங்கம் இணைந்து, நேர்மையான மற்றும் 100 சதவீத வாக்குப்பதிவு குறித்து வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்ற மாபெரும் வாக்காளர் விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டத்தினை தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக், இ.ஆ.ப., அவர்கள், இன்று (19.04.2026) சென்னை நேப்பியர் பாலம் அருகிலிருந்து கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

இந்த மாரத்தான் ஓட்டமானது, நேப்பியர் பாலத்தில் தொடங்கி காமராஜர் சாலை வழியாக விவேகானந்தர் இல்லம் வரை சென்று மீண்டும் காமராஜர் சாலை வழியாக நேப்பியர் பாலம் வந்தடைந்தது. இந்த மாரத்தான் ஓட்டத்தில் பங்கேற்ற அனைவருக்கும் பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாநகராட்சி ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள், இணை தலைமை தேர்தல் அதிகாரி திரு.ஸ்ருதஞ்ஜெய் நாராயணன், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/ வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு. கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., அவர்கள், இந்திய வாக்காளர் சங்கத்தின் நிறுவனத் தலைவர், திரு.இளந்திருமாறன் மற்றும் நிர்வாகிகள் திரு.பாலசுப்பிரமணியன், டேவிட் வெஸ்லி, மண்டல அலுவலர் திரு.பானுகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**“ தேர்தல் திருவிழா – தமிழ்நாட்டின் பெருவிழா ”**

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**